**சுருக்கம்**

கலை பண்பாட்டுத் துறை – தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் – பணியாளர் செலவு, நிருவாகச் செலவுகளுக்கான 2012–2013 ஆம் ஆண்டின் மூன்று மற்றும் நான்காம் காலாண்டுகளுக்கான நல்கை முன்பணமாக விடுவித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுலா,பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்.2)த் துறை**

**அரசாணை (நிலை) எண்.60** **நாள் .28 .03.2013**

**திருவள்ளுவர் ஆண்டு 2044, பங்குனி–15**

**படிக்கப்பட்டது :-**

1. அரசாணை (நிலை) எண்.171, சுற்றுலா மற்றும் பண்பாட்டு (பண்.2)த் துறை, நாள் 26.7.2012.
2. அரசாணை (நிலை) எண்.203, சுற்றுலா மற்றும் பண்பாட்டு (பண்.2)த் துறை, நாள் 16.10.2012
3. முதன்மைச் செயலாளர் / ஆணையர், கலை பண்பாட்டுத் துறை கடித ந.க.எண். 4747/சசிம2/2012, நாள்.11.12.2012.

-----

**ஆணை:**

தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் மூலமாக வாரிய உறுப்பினர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு மூக்கு கண்ணாடி நிதியுதவி, கல்வி நிதியுதவி, திருமண நிதியுதவி, மகப்பேறு நிதியுதவி, கருக்கலைப்பு/கருச்சிதைவு நிதியுதவி, இயற்கை மரணம் / ஈமச் சடங்கிற்கு உதவித்தொகை, ஓய்வூதியம், இலவச மருத்துவ முகாம், இலவச வீட்டுமனைப் பட்டா, இலவச இசைக் கருவிகள் போன்ற நலத்திட்ட உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கீழ்க்கண்டவாறு ஆணைகள் வெளியிடப்பட்டன:-

அ) நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரிய நிருவாகச் செலவுக்கான மொத்த மானியம் (Block Grant) ஆண்டொன்றிற்கு ரூ.10.00 இலட்சம் என நிர்ணயிக்கப்படுகிறது. நிருவாகச் செலவில் பற்றாக்குறை ஏற்படும்போது தணிக்கை அறிக்கையின் அடிப்படையில் பற்றாக்குறை மானியம் (deficit grant) வழங்கப்படும்.

ஆ) உறுப்பினர் கட்டணம் மற்றும் ஏனைய இனங்களின் கீழ் வாரியத்தால் ஈட்டப்பட்டு தற்போது வாரியத்தின் இருப்பில் உள்ள ரூ. 22.24 இலட்சத்தை அதிக வட்டி வருவாய் கிடைக்கும் அரசு பொதுத் துறை நிதி நிறுவனங்களில் வாரியத்தின் பெயரில் வைப்பீடாக பராமரித்து அதன் மூலம் கிடைக்கும் வருவாயை வாரிய செலவிற்கு பயன்படுத்திட அனுமதி அளிக்கப்படுகிறது.

இ) 2008–09 முதல் 2011–12 வரையிலான காலத்திற்கான தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் மீது திருத்தியமைக்கப்படும் நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரிய நிருவாகக் குழுவின் ஒப்புதலைப் பெற்று அதன் விவரத்தை அரசுக்குத் தெரிவிக்க வேண்டும்.

ஈ) தற்போது பள்ளிக் கல்வி முழுமையாக இலவசமயமாக்கப்பட்டுள்ள நிலையில், வாரியத்தின் மூலம் கல்வி நிதியுதவி வழங்கிடத் தேவையில்லை.

உ) மகப்பேறு மற்றும் கருச்சிதைவுக்கு சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறைத் திட்டத்தின் கீழ் நிவாரணம் வழங்கிட வகை செய்யப்பட்டுள்ளதால், நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு அத்தகைய நிதியுதவியை வாரியத்திலிருந்து வழங்கிடத் தேவையில்லை.

ஊ) நலத்திட்ட உதவிகளில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை தவிர்த்திட ஏதுவாக முதலமைச்சர் உழவர் பாதுகாப்பு திட்ட நிவாரணத்தின் அடிப்படையில், வாரியம் வழங்கும் இயற்கை மரணம் மற்றும் ஈமச் சடங்கிற்கான உதவித் தொகையை ரூ.10,000/– என திருத்தியமைக்கப்படுகிறது.

ஏ) திருமண உதவியைப் பொருத்தமட்டில், சமூக நலத்துறையால் வழங்கப்படும் திருமண உதவியைப் பெற இயலாதவர்களுக்கு மட்டும் வாரியத்திலிருந்து நிதியுதவி வழங்கிடலாம்.

ஏ) நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் ஏனைய கலைஞர்களிடையே ஏற்றத்தாழ்வினை தவிர்த்திடும் வகையில், நாட்டுப்புறக் கலைஞர்களுக்கென யாதொரு சலுகையுமின்றி, நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரிய உறுப்பினர்களுக்கான ஓய்வூதிய திட்டத்தினை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் செயல்படுத்திவரும் நலிந்த கலைஞர்களுக்கான ஓய்வூதிய திட்டத்துடன் சேர்த்து செயல்படுத்திட வேண்டும்.

3. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு நலத்திட்ட உதவிகளை வழங்கிட தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ.25.00 இலட்சம் மானியமாக நிர்ணயித்தும் மேற்கொள்ளப்படும் செலவிற்கேற்ப மானியத்தை காலாண்டு அடிப்படையில் விடுவித்திடவும் அரசு ஆணையிட்டது. மேலும் நலவாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்பட உள்ள நலத்திட்ட உதவிகளுக்காக தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்திற்கு நல்கைத் தொகையாக விடுவிப்பதற்கான ஆணை போதிய நிதியொதுக்கம் பெற்ற பின்னர் தனியாக வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தின் நிர்வாகச் செலவுகளுக்காக ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) நலவாரியத்திற்கான 2012–2013 ஆம் ஆண்டின் நல்கையாக ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டது.

5. தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரிய பணியாளர் ஊதியம் உள்ளிட்ட நிர்வாகச் செலவுகளுக்கு 2012–2013 ஆம் நிதியாண்டின் மூன்று மற்றும் நான்காம் காலாண்டுகளுக்கான நல்கைத் தொகை ரூ.5.00 இலட்சம் மற்றும் 2012–2013 ஆம் நிதியாண்டின் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தின் நலத்திட்ட உதவிகளுக்கான நல்கைத் தொகை ரூ.25.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ.30.00 இலட்சம் தொகையினை தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் போதுமான நிதி கையிருப்பு இல்லாமையால் சிறப்பு நேர்வாக கருதி நல்கையாக வழங்குமாறு கலை பண்பாட்டு ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

6. மேலே உள்ள கலை பண்பாட்டுத் துறை ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

(அ) தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரிய கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படாத நிலையில் அவ்வாரிய பணியாளர் ஊதியம் உள்ளிட்ட நிர்வாகச் செலவுகளுக்கு 2012–2013 ஆம் நிதியாண்டின் மூன்று மற்றும் நான்காம் காலாண்டுகளுக்கான முன்பணமாக ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

(ஆ) தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரிய தணிக்கை செய்யப்பட்டு கணக்கு விவரங்கள் சமர்ப்பிக்கப்படாத நிலையில், 2012–2013 ஆம் நிதியாண்டின் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தின் நலத்திட்ட உதவிகளுக்கு முன்பணமாக ரூ.25.00 இலட்சம் (ரூபாய் இருபத்தி ஐந்து இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

(இ) பத்தி 2–ல் உள்ள நிபந்தனைகள் பொருந்தும்.

7. மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:–

<u>ரூபாய் 5 இலட்சம்</u>

“2205 –00 கலையும் பண்பாடும் – 102 கலை மற்றும் பண்பாட்டை வளர்த்தல் – AL தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் – 09 உதவித் தொகை –01 நடப்புச் செலவுக்கான உதவித் தொகை”

(கு.தொ.கு 2205 00 102 AL 0912 )

**<u>ரூபாய் 25 இலட்சம்</u>**

"2205 –00 கலையும் பண்பாடும் – 102 கலை மற்றும் பண்பாட்டை வளர்த்தல் – AL தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் – 09 உதவித் தொகை –03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"
(து.தொ.கு 2205 00 102 AL 0930 )

8. மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினைப் பெற்று வழங்க முதன்மைச் செயலாளர் / கலை பண்பாட்டு ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

9. நிருவாகச் செலவுகளுக்கான அறிக்கை ஒன்றை அரசுக்கு அனுப்பிவைக்குமாறு முதன்மைச் செயலாளர் / ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்கான பயனீட்டுச் சான்றினை செயலாளர், தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்திலிருந்து பெற்று அரசுக்குச் சமர்ப்பித்திடுமாறு முதன்மைச் செயலாளர் / கலை பண்பாட்டு ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

11. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண்:163/DS(KM)/2013, நாள். 28.03.2013-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ர.கண்ணன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர்(பொ),
கலை பண்பாட்டுத் துறை, சென்னை – 8.
உறுப்பினர் – செயலாளர்
தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம், சென்னை – 8
செயலாளர்,
தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம், சென்னை – 8
முதன்மை மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை – 18.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை – 9/18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – 9. (இரு நகல்கள்)

<u>நகல்:-</u>
முதுநிலை நேர்முக உதவியாளர்,
நிதித் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை –9
முதுநிலை நேர்முக உதவியாளர்,
பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அலுவலகம்,
சென்னை – 9.
நிதித் (கல்வி-II) துறை, சென்னை – 9.
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை – 9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பொது / பண் 1) துறை, சென்னை – 9.
இருப்பு கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்